# காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2019

## வகுப்பு 12

பதிவெண் [ ][ ][ ][ ][ ][ ]

நேரம்: 2.30 மணி **PART - III - பொருளியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

அறிவுரைகள்:

1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு:

### பகுதி - I

**20×1=20**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) "மேக்ரோ" என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே.எம். கீன்ஸ் இ) ராகனர் பிரிக்ஸ் ஈ) காரல் மார்க்ஸ்

2) கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.
அ) பண அளிப்பு ஆ) சொத்துகள்
இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

3) எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு

4) தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முக வரிகளை கழித்தால் கிடைக்கும் வருமானம் .............. ஆகும்.
அ) பெயரளவு வருமானம் ஆ) செலவிடக்கூடிய வருமானம்
இ) உண்மை வருமானம் ஈ) தலா வருமானம்

5) வருமான முறை என்பது
அ) $y = w+r+i+\pi+(R-P)$ ஆ) $y = w+i+r+\pi+R-P$
இ) $y = w+r+\pi+i+R/P$ ஈ) $y = w+r+i+\pi+R\times P$

6) தொகுதேவை சமம்
அ) C+I+G ஆ) C+I+G+X−M இ) C+S+T+X−M ஈ) C+S+T+Rf

7) மறைமுக வேலையின்மையில் உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
அ) பூஜ்யம் ஆ) ஒன்று இ) இரண்டு ஈ) நேர்மறை

8) தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டிவீதம் ..............க்கான வெகுமதி.
அ) முதலீடு ஆ) தேவை இ) மூலதனம் ஈ) சேமிப்பு

9) தேசிய வருவாய் உயரும் போது
அ) APCயின் மதிப்பு குறைந்து சென்று MPCயின் மதிப்பை நெருங்கிவிடும்.
ஆ) APC உயர்ந்து MPCன் மதிப்பை விட்டு விலகிச்செல்லும்.
இ) APC மாறாமல் இருக்கும் ஈ) APC முடிவிலியை நெருங்கிச் செல்லும்

10) MPCஐயும் MPSஐயும் கூட்டினால் கிடைப்பது
அ) 1 ஆ) 2 இ) 0.1 ஈ) 1.1

11) பொருத்துக:
அ) MPS - 1. C+S
ஆ) K - 2. $\Delta I/\Delta C$
இ) Y - 3. $\Delta S/\Delta Y$
ஈ) $\beta$ - 4. $\frac{1}{1-MPC}$
அ) 1 2 3 4 ஆ) 2 1 4 3 இ) 3 4 1 2 ஈ) 1 4 3 2

12) RBIயின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களூரு

13) பணவீக்கம் என்பது
அ) விலைகள் அதிகரிப்பு ஆ) விலைகள் குறைத்தல்
இ) பணமதிப்பு அதிகரிப்பு ஈ) விலைகள் மாறாதிருத்தல்

14) வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது
அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஆ) நபார்டு
இ) ஐ சி ஐ சி ஐ ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

15) நபார்டு வங்கி எப்பொழுது தொடங்கப்பட்டது?
அ) ஜூலை 1962 ஆ) ஜூலை 1972 இ) ஜூலை 1982 ஈ) ஜூலை 1992

16) 2016ல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்பு பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
அ) `500 மற்றும் `1000 ஆ) `1000 மற்றும் `2000
இ) `200 மற்றும் `500 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்
17) பணமாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை
அ) பண சந்தை ஆ) அந்நிய செலாவணி இ) பங்கு சந்தை ஈ) மூலதன சந்தை
18) ஏற்றுமதி நிகரம் என்பது
அ) ஏற்றுமதி×இறக்குமதி ஆ) ஏற்றுமதி+இறக்குமதி
இ) ஏற்றுமதி–இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி
19) பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) வாஷிங்டன் டி.சி ஆ) நியூயார்க் இ) வியன்னா ஈ) ஜெனிவா
20) கீழ்க்கண்டவற்றில் எது சார்க் (SAARC) உறுப்பினர் நாடு அல்ல?
அ) பாகிஸ்தான் ஆ) ஸ்ரீலங்கா இ) பூடான் ஈ) சீனா

## பகுதி - II

ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14
வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) பணவீக்கம் என்பதை வரையறுக்கவும்.
22) GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக.
23) தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தை தருக.
24) சராசரி நுகர்வு நாட்டம் (APC) வரையறு.
25) பணத்தின் இலக்கணம் வரைக.
26) நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
27) பணவியல் கொள்கை என்றால் என்ன?
28) பண மதிப்பிறக்கம் என்றால் என்ன?
29) பொதுச்சந்தை வரையறுக்கவும்.
30) பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.

## பகுதி - III

ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21
அவற்றில் வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) பொருளாதார அமைப்புகளின் வகைகளை குறிப்பிடுக.
32) தேசிய வருவாய் கணக்கிடுதலில் இருமுறை கணக்கீட்டுப் பிரச்சனைக்கு என்ன தீர்வு?
33) தொகுதேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறுக.
34) பெருக்கியின் வகைகள் யாவை?
35) தேவை இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விள்க்குக.
36) நபார்டின் பணிகள் யாவை?
37) பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தை பட்டியலிடுக.
38) வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன?
39) சேயின் விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.
40) தலைவீத வருமானம் பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41) அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரிக்கவும். (அல்லது)
ஆ) இர்விங் பிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.
42) அ) நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின வட்ட ஓட்டம் விளக்குக. (அல்லது)
ஆ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.
43) அ) கீன்ஸின் அடிப்படை கருத்துக்களை விவரிக்கவும். (அல்லது)
ஆ) தேசிய வருவாயின் அடிப்படை கருத்துக்களை விவரிக்கவும்.
44) அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க. (அல்லது)
ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.
45) அ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விள்க்குக.
ஆ) ADF மற்றும் ASFக்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரிக்கவும். (அல்லது)
ஆ) உள்நாட்டு வாணிபத்துக்கும் பன்னாட்டு வாணிபத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவாதிக்கவும்.
46) அ) நுகர்வு சார்பின் அக மற்றும் புறக்காரணிகளை விளக்குக. (அல்லது)
ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.
47) அ) வணிகச்சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும். (அல்லது)
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விளக்குக.

@@@@@@